ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2243 - 2021 අගෝස්තු මස 27 වැනි සිකුරාදා - 2021.08.27

*2243 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - | அரசாங்க அறிவித்தல்கள் | *1320* |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | - | விலைக் கட்டளைகள் | - |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | *1320* | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | *1323* |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - | மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2021, செத்தெம்பர் மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

### 2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1319 - B 082263 - 402 (2021/08)

## அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும்

*2021 இன் இல. 674*

**நியமனம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 55(2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் திருமதி எஸ். ஏ. தில்ருக்ஷி அவர்கள், 2021 ஆம் ஆண்டு யூலை மாதம் 05 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக சட்டவரைஞர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அமைச்சரவையின் கட்டளையின்படி,

டபிள்யூ. எம். டி. ஜே. பெர்னாண்டோ,
அமைச்சரவைச் செயலாளர்.

2021, ஒகத்து 06.

08-434

---

## அரசாங்க அறிவித்தல்கள்

### உக்கல் அலுத்நுவர கதிர்காமம் தேவாலயத்தின் வருடாந்த எசல பெரஹர - 2021

2021 ஆம் ஆண்டின் எசல பெரஹர நிகழ்விற்கான முகூர்த்தக்கால் ஊன்றும் வைபவம் 2020.08.09 ஆந் திகதி நடாத்தப்படும்.

**பெரஹர நடைபெறும் கால எல்லை :**

* 2021.09.07 ஆந் திகதி சர்வ ராத்திரி பிரித் தர்ம போதனை.
* 2021.09.08 ஆந் திகதி முதல் 2021.09.12 ஆந் திகதி வரை உள்வீதி பெரஹர நடைபெறும்.
* 2021.09.13 ஆந் திகதி முதல் 2021.09.17 ஆந் திகதி வரை இரு வேளை பெரஹர ஊர்வலம் இடம்பெறும்.
* 2021.09.18 ஆந் திகதி முதல் 2021.09.22 ஆந் திகதி வரை மகா பெரஹர நடைபெறும்.
* 2021.09.23 ஆந் திகதி காலை சுப வேளையில் நீர்வெட்டும் வைபவத்தின் பின்னர் எசல பெரஹர ஊர்வலம் நிறைவுபெறும்.

**முகாமிடப்பட்ட பிரதேசம் என்பது :**

2. ஆலய பூமியின் மேல் வீதி, கிழக்குப் பக்கம் மற்றும் மேற்குப் பக்கம் ஆகியன பிரித் வத்த, கல்வத்த, மாலுகார வத்த மற்றும் வடக்குத் திசையில் அமைந்துள்ள உடகஹகெதரவத்த ஆகிய பிரதேசம் பெரஹர நடைபெறும் பிரதேசமாகக் குறிக்கப்பட்டுள்ளது.

**உணவு மற்றும் நீர் :**

3. விகாரை வளாகம், போதி வளாகம், சைத்திய வளாகம் மற்றும் அதனைச் சூழவுள்ள பிரதேசத்தில் உணவு சமைத்தலை தடை செய்கிறேன்.

4. யானைகள் கட்டப்பட்டிருக்கும் இடங்களில் அநாவசியமாக நடமாடல் மற்றும் அவைகளுக்கு உணவு கொடுத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

5. பெரஹர நடைபெறும் காலத்தில் தேவையான குடிநீர், மேலதிக தண்ணீர் தாங்கிகள் மூலம் நீர் வழங்குவதற்கு தேசிய நீர் வடிகால் மற்றும் நீர் வழங்கல் சபையின் பிரதேச அலுவலகத்திற்கும் இம்புல்பே பிரதேச சபைக்கும் பொறுப்பளிக்கின்றேன்.

**வியாபாரம் மற்றும் கடைத்தொகுதி அமைத்தல் :**

*6. தேவாலயத்தின் மேல் வளாகம், மத்திய வீதி, வளாகத்தினுள் பிரவேசிக்கும் வீதி மற்றும் அவ்விரு பிரதேசத்தினுள் பூக்கள், வாசனைத் திரவியங்கள், மெழுகுதிரி மற்றும் தேவையான பூசைப் பொருட்கள் விற்பனை செய்தல் தடை செய்யப்பட்டுள்ளது.*

*7. மேற்குறிப்பிடப்பட்ட (2) இரண்டாம் சரத்தில் குறிப்பிட்டுள்ளதன்படி தேவாலய வளாகத்திலும் வேறு ஸ்தானங்களிலும் வியாபாரம் செய்தலை தடை செய்கிறேன்.*

*8. உற்சவ காலங்களில் வியாபாரம் செய்தலுக்காக குத்தகைக்கு விடப்படும் தற்காலிகக் கடை, காணி மற்றும் அதனைச் சூழவுள்ள பிரதேசத்தில் நீதி முறைப்படி ஏற்றுக்கொள்ளப்படாத பண்டங்களை விளம்பரப்படுத்துதல், விற்பனை செய்தலை தடை செய்கிறேன்.*

*9. பிரதேச செயலாளரின் அதிகாரம்பெற்ற அலுவலரொருவரது அனுமதியின்றி எந்த ஒரு நபராலும் முகாமிடப்பட்டுள்ள பிரதேசத்திற்குள் டிக்கெட், கொடி விற்றல் அல்லது வேறு ஒரு முறையில் எவ்வித காரியத்திற்காகவும் பணச் சேகரிப்பு செய்யக் கூடாது. அத்துடன் பெரஹர ஊர்வலம் நிகழும் கால எல்லைக்குள் அப்பூமியிலும், அச்சுற்றுப்புற ஆலய எல்லைக்குள் புகையிலை தொடர்பான உற்பத்திகள், அனைத்து மதுப்பொருள் விற்பனை மற்றும் உபயோகப்படுத்தலைப் பூரணமாகத் தடைசெய்கிறேன்.*

*10. என்னிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட அனுமதியின்றி முகாமிடப்பட்டுள்ள பிரதேசத்தில் எவ்வித கட்டிடமொன்றினை அமைத்தல் மற்றும் அனுமதியில்லாத விற்பனைக் கருமங்கள் தடை செய்யப்பட்டுள்ளதுடன் அவ்வாறான கருமங்கள், நிர்மாணப் பணிகள் சுகாதாரப் பிரிவின் சிபாரிசுகளின்படி பொலிஸாரால் அகற்றப்படும்.*

**வாகனங்கள் :**

*11. பெரஹர ஊர்வலம் நிகழும் காலத்திற்குள் விழா பூமிக்கு வாகனங்கள் உட்செல்வதற்கு எசல விழாவிற்காக வெளியிடப்பட்ட அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்களுக்கு மாத்திரமே அனுமதி அளிக்கப்படும். அதன்படி கீழ்க்காணும் வீதிகளில் போக்குவரத்திற்காக வாகனங்களுக்கு அனுமதியளிக்கப்பட மாட்டாது.*

* *கொழும்பு, பதுளை பிரதான வீதிகளில் அலுத்நுவர பிரதேச செயலாளர் அலுவலக முச்சந்தியிலிருந்து ஆலய பூமிக்கு உட்பிரவேசிக்கும் வீதி.*

* *தொடபல்ல, பொகுணேகம பிரதேசங்களிலிருந்து ஆலயத்திற்கு உட்பிரவேசிக்கும் வீதி.*

* *பிரித்வத்த, கல்வத்த பிரதேசங்களிலிருந்து ஆலய பூமிக்கு உட்பிரவேசிக்கும் பாதை.*

*12. பிரதான வீதியில் பிரத்தியேக வாகனங்கள் நிறுத்தி வைத்தலை முற்றிலும் தடை செய்கிறேன். இருசக்கர வண்டி மற்றும் தள்ளுவண்டி உட்பட அனைத்து வாகனங்களும் வீதி மற்றும் முகாமிற்குப் பொறுப்பான அலுவலரின் அனுமதிப்பத்திரம் இன்றி முகாம் பூமிக்கு உட்செல்லல் தடையாகும்.*

**புகைப்படம் எடுத்தல் :**

*13. அனுமதியின்றி ஆலயத்தின் மேற்பகுதி, மாளிகையின் மேற்பகுதி புகைப்படம் எடுத்தல் மற்றும் ஒளிப்பதிவு செய்தல் முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது.*

**மின்சார வசதி :**

*14. ஆலய பூமியின் மற்றும் அருகிலுள்ள வீதி விளக்கு மற்றும் மேலதிக விளக்குகளைப் பொருத்துதல், இலங்கை மின்சார சபைக்கு மற்றும் இம்புல்பே பிரதேச சபைக்குப் பொறுப்பளிக்கிறேன்.*

**சுகாதார வசதிகள் :**

*15. பெரஹர மகோற்சவத்திற்கு முன்பு மற்றும் பின்பு சுகாதார விடயங்கள், சுகாதார நல பாதுகாப்பு விடயங்கள், டெங்கு ஒழிப்பு விடயங்கள் மற்றும் கழிவுகளை அப்புறப்படுத்துதல் போன்றவை இம்புல்பே பிரதேச சபைக்கு, சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு மற்றும் சப்பிரகமுவ மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்திற்குக் கையளிக்கிறேன்.*

*16. யாரேனும் நோய்த் தொற்றுக்குள்ளானவரின் அல்லது தொற்று நோயொன்றினால் பாதிக்கப்பட்ட எந்த ஒரு நபரும் முகாம் வளாகத்திற்கு உட்செல்லல் கூடாது. அத்துடன் நாட்டில் தற்போது நடைமுறையிலுள்ள சுகாதார விதிமுறைகளுடன், சுகாதாரப் பாதுகாப்பு வழிமுறைகளுக்கு ஏற்ப குறிப்பாக கோவிட் 19 நோய்த்தொற்று நிலைமைக்கு ஏற்ப சுகாதார பாதுகாப்பு வழிமுறைகளின்படி நடந்துகொள்ளுமாறு கண்டிப்பாகப் பொறுப்பேற்கப்பட வேண்டும்.*

**யாசகர்கள் :**

*17. யாசகம் பெறல் அல்லது புண்ணியத்திற்கு கையேந்துவதற்காக பூசை பூமிக்குள் அல்லது முகாமிடப்பட்டுள்ள பிரதேசத்திற்குள் பணத்தால் அல்லது வேறு முறையால் அல்லது வேறு முறையில் அல்லது எவ்வித நபரினாலும் புண்ணியத்திற்காக வழங்கல் அல்லது தானம் செய்தல் அனுமதி அளிக்கப்பட மாட்டாது.*

**பாதுகாப்பு :**

*18. அனைத்துப் பாதுகாப்பு அலுவல்கள், பெரஹர ஊர்வலத்திற்கு இடையூறு ஆகாத வண்ணம் வீதியில் வண்டி வாகனங்கள் செலுத்துதலைப் பாதுகாப்புப் பிரிவு மற்றும் பொலிஸாருக்குப் பொறுப்பளிக்கிறேன்.*

**வேறு :**

*19. பட்டாசு, வெடிப் பொருட்கள் போன்றவை பிரதேசத்திற்குள் வெடிக்கச் செய்தல் தடையாகும்.*

*20. இம்முறை பெரஹர மகோற்சவம் சம்பிரதாயபூர்வமாக மாத்திரமே நடைபெறும்.*

*மொழிக் கருத்து வேறுபாடு ஏற்படும் சந்தர்ப்பத்தில் சிங்கள மொழியைக் கையாளவும்.*

**டீ. பீ. ஜீ. ரேணுகா,**
*பிரதேச செயலாளர்,*
*இம்புல்பே.*

*பிரதேச செயலகம்,*
*இம்புல்பே.*

*08-497*

---

**பிரதேச செயலகம் - கொட்டபொல**

*யாத்திரை கட்டளைச் சட்டத்தின் கீழ் (அத்தியாயம் 175) கெடபருவ இராஜமஹா விஹாரையின் வருடாந்த ஆடித்திருவிழா - 2021*

*மாத்தறை மாவட்டத்தின் கொட்டபொல பிரதேச செயலாளரின் பிரிவில் புராதன கெடபருவ இராஜமஹா விஹாரையின் ஆடித்திருவிழா 2021, புரட்டாசி மாதம் 17 ஆந் திகதி முதல் 21 ஆந் திகதி வரை நடைபெறும் என்பதை யாத்திரிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் (175 ஆம் அத்தியாயம்) பிரகாரம் இல. 500 மற்றும் 1988, பங்குனி மாதம் 31 ஆந் திகதியில் வெளியிடப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை பகுதி I : தொகுதி (I) - பொதுவில் பிரசுரிக்கப்பட்ட விதியின் கீழ் இத்தால் அறிவிக்கின்றேன்.*

*கணேஷ அமரசிங்ஹ,*
*பிரதேச செயலாளர்,*
*கொட்டபொல.*

*கொட்டபொல பிரதேச செயலகம்,*
*2021, ஓகத்து 06.*

*08-354*

**மாவட்டச் செயலாளர் அலுவலகம் - காலி**

*யாத்திரைப் பயணக் கட்டளைச் சட்டம்*

*தென் மாகாணத்தில் காலி மாவட்டத்தின் மாதம்பாகம பிரதேச செயலப் பிரிவில், சீனிகம கிராம அலுவலர் பிரிவில் ஸ்ரீ தெவொல் மகா தேவாலயத்தின் வருடாந்த எசல ஊர்வலம் 2021, செத்தெம்பர் மாதம் 11 ஆந் திகதி தொடக்கம் 13 ஆந் திகதிவரை நடைபெறும் என்பதனை யாத்திரைப் பயணக் கட்டளைச் சட்டத்தின் (175 ஆம் அதிகாரத்தின்) 2 ஆம் பிரிவிற்கிணங்க தயார்படுத்தப்பட்ட 1965/39 ஆம் இலக்க 2016.05.06 ஆந் திகதி கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட கட்டளையின் பிரகாரம் இத்தால் அறியப்படுத்துகின்றேன்.*

ஷாந்த வீரசிங்ஹ,
*மாவட்டச் செயலாளர்/மாவட்ட அதிபர்,*
*காலி நிருவாக மாவட்டம்.*

*காலி மாவட்ட செயலகம்,*
*2021, ஒகத்து 05.*

*08-355*

---

## அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

**மக்கள் வங்கி - கிரிபத்கொடை கிளை**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D என்னும் பிரிவின் கீழான தீர்மானம்*

கடன் பெற்றவர் : ஹபுஆரச்சிகே சதுரங்கி சனீகா விஜேசிங்க, இயக்குநர்,
மட்டுப்படுத்தப்பட்ட சனீகா டிரேடிங் கம்பனி (தனியார்) நிறுவனம்

வழங்கப்பட்டதொகையும் திகதியும் :

*ரூபா 3,000,000.00 - 02.04.2019*
*ரூபா 2,442,000.00 - 29.10.2019*
*ரூபா 1,558,000.00 - 03.02.2020*
*ரூபா 2,300,000.00 - 20.07.2017*
*ரூபா 1,500,000.00 - 26.12.2018*

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D என்னும் பிரிவின் கீழான தீர்மானம் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் ......... திகதி நடைபெற்ற அவர்களது கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறியத்தரப்படுகின்றது.*

*கம்பஹா பிரசித்த நொத்தாரிசு டீ. எஸ். லோரன்ஸ் அவர்களால் 30.03.2019 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்ட இலக்கம் 12973, 21.06.2017 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட இலக்கம் 11119 மற்றும் 29.12.2017 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட இலக்கம் 11902 கொண்ட முறிகளின் பிரகாரம் வருமதியான கொடுப்பனவில் 2007 ஆம் ஆண்டு இலக்கம் 07 கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் PV 75587 இன் கீழ் ஒருங்கினைக்கப்பட்டதும் பதிவுசெய்யப்பட்டதுமான மட்டுப்படுத்தப்பட்ட சனீகா டிரேடிங் கம்பனி (தனியார்) நிறுவனம் கடமைப்பட்டவராகவும் ஹபுஆரச்சிகே சதுரங்கி சனீகா விஜேசிங்க ஈட்டாளராகவும் தவணை தவறியுள்ளமையாலும் குறிப்பிட்ட முறிகளின் கீழ், தற்போது இருபத்தி இரண்டு இலட்சத்து நாற்பத்தி ஒன்பதினாயிரத்து அறுநூறு ரூபாய் அறுபத்தி ஒரு சதம் (ரூபா 2,249,600.61) மற்றும் இருபத்திநான்கு இலட்சத்து நாற்பத்தி இரண்டாயிரம் (ரூபா 2,442,000.00) மற்றும் பதினைந்து இலட்சத்து ஐம்பத்தி எட்டாயிரம் (ரூபா 1,558,000.00) மற்றும் இருபத்தி மூன்று இலட்சம் (ரூபா 2,300,000.00) மற்றும் பதினைந்து இலட்சம் (ரூபா 1,500,000.00) பணத்தொகைகள் தற்போது மக்கள் வங்கிக்கு வருமதியாக வரவேண்டியுள்ளது. மேலும் இருபத்தி இரண்டு இலட்சத்து நாற்பத்தி ஒன்பதினாயிரத்து அறுநூறு ரூபாய் அறுபத்தி ஒரு சதம் (ரூபா 2,249,600.61) பணத்தொகைக்காக 03.05.2020 ஆந் திகதியிலிருந்து ஏலம் செய்யப்படும் திகதி வரை 20% வருடாந்த வட்டியுடனும், இருபத்திநான்கு இலட்சத்து நாற்பத்தி இரண்டாயிரம் (ரூபா 2,442,000.00) பணத்தொகைக்காக 29.10.2019 ஆந் திகதியிலிருந்து ஏலம் செய்யப்படும் திகதி வரை 18% வருடாந்த வட்டியுடனும், பதினைந்து இலட்சத்து ஐம்பத்தி எட்டாயிரம் (ரூபா 1,558,000.00) பணத்தொகைக்காக 03.02.2020 ஆந் திகதியிலிருந்து ஏலம் செய்யப்படும் திகதி வரை 18% வருடாந்த வட்டியுடனும், இருபத்தி மூன்று இலட்சம் (ரூபா 2,300,000.00) பணத்தொகைக்காக 01.03.2020 ஆந் திகதியிலிருந்து ஏலம் செய்யப்படும் திகதி வரை 18% வருடாந்த வட்டியுடனும், பதினைந்து இலட்சம் ரூபா 1,500,000.00) பணத்தொகைக்காக 01.03.2020 ஆந் திகதியிலிருந்து ஏலம் செய்யப்படும் திகதி வரை 21.5% வருடாந்த வட்டியுடனும் மக்கள் வங்கிச் சட்டத்தின் "29L"*

பிரிவின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய பணங்களும் கட்டணங்களும் மேலும் ஏதாவது கொடுப்பனவுகள் பெறப்பட்டு இருப்பின் அவை நீங்கலாக குறிப்பிட்ட இருபத்தி இரண்டு இலட்சத்து நாற்பத்தி ஒன்பதினாயிரத்து அறுநூறு ரூபாய் அறுபத்தி ஒரு சதம் (ரூபா 2,249,600,61), இருபத்திநான்கு இலட்சத்து நாற்பத்தி இரண்டாயிரம் (ரூபா 2,442,000.00), பதினைந்து இலட்சத்து ஐம்பத்தி எட்டாயிரம் (ரூபா 1,558,000.00), இருபத்தி மூன்று இலட்சம் (ரூபா 2,300,000.00) மற்றும் பதினைந்து இலட்சம் (ரூபா 1,500,000.00) பணத்தொகைகளை அறவிடுவதற்கு கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர் சொக்மன் சமரவிக்ரம என்பவர்களினால் குறிப்பிட்ட இலக்கம் 12973, 11119 மற்றும் 11902 கொண்ட முறிகளின் பிரகாரம் குறிப்பிட்ட வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனமும் வளவுகளும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டும் என மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் அதற்குறித்தாக்கப்பட்ட திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தால் அதற்குறித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோரளை அதிகாரிபத்துவ களனிய பிரதேச சபை எல்லைக்குள் களனிய பிரதேச செயலாளர் பிரிவில் இலக்கம் 267, தலவதுஹேன்பிட வடக்கு கிராமசேவைப் பிரிவில் தலவதுஹேன்பிட கிராமத்தில் அமைந்துள்ள மரந்தகஹவத்தை எனும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டீ. சீ. எம். எஸ். விமலரத்ன அவர்களால் 04.03.2005 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட இலக்கம் 51/ 2005 எனும் வரைபடத்தில் காணப்படும் 1A எனப்படும் பிரிக்கப்பட்ட காணித்துண்டின் எல்லைகளாக- வடக்கில் 1E எனப்படும் காணித்துண்டும் கிழக்கில் 1B மற்றும் 1C எனப்படும் காணித்துண்டுகளும் தெற்கில் 1D எனப்படும் காணித்துண்டும் மற்றும் மேற்கில் 1F எனப்படும் காணித்துண்டும் எல்லைகளாக அமைந்த பத்து பேர்ச்சஸ் (00ஏ. 00றூ. 10பே) விசாலமான காணியும் அதற்குற்பட்ட மரங்கள், பயிர்ச் செய்கைகள், கட்டிடங்கள் சகலதுமாகும். இந்தக் காணி கம்பஹா காணிப்பதிவகத்தில் இலக்கம் G96/144 இன்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் குறிப்பிட்ட வரைபடத்தில் காணப்படும் மேலாகவும் நெடுகிலுமான (பாதை ஒதுக்கீடு) போக்குவரத்துப் பாதையும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி

பிரதேச முகாமையாளர்,
கம்பஹா.

மக்கள் வங்கி,
பிரதேச தலைமை அலுவலகம்,
இல. 131, கண்டி வீதி,
பெலும்மஹர,
முதுன்கொடை.

08-458

## கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் 4 ஆவது சிறப்பு சட்டப்படி கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ (பதிவு இலக்கம் PQ 116) பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

கிளை : திகன
கடன் கணக்கு இலக்கம் : 2400755, 911289 மற்றும் 2145138

ஷா பெக் இன்டஸ்ரீஸ்

2021.04.28 ஆந் திகதி கூடிய கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையின் கூட்டத்தில் பின்வருமாறு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கண்டி பிரசித்த நொத்தாரிசு கே. வீ. ஏ. டி. சீ. கே. விபுலசேன அவர்களால் 2015.07.17 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட ஈட்டுமுறி இல. 1593, 2016.07.15 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட ஈட்டுமுறி இல. 1862 மற்றும் 2017.10.24 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட ஈட்டுமுறி இல. 2183 என்ற கொமாஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீயின் பெயருக்கு எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஈட்டுமுறியின் கீழ், மேற்குறித்த ஈட்டுமுறியினுள் மற்றும்/ அல்லது கீழே குறிப்பிடப்பட்ட முதலாவது ஆதன இடாப்பில் விஸ்தரிக்கப்பட்டு விபரிக்கப்பட்டுள்ள காணி மற்றும் வளாகம் சம்பந்தமாக பெற்றுக்கொள்ள வேண்டிய பணத்தொகை செலுத்துவதற்கு, திகன, புதிய நகரம், இல. 23 என்ற விலாசத்தில் அமைந்துள்ள "ஷா பெக் இன்டஸ்ரீஸ்" என்ற பெயருடைய தலைப்பில், நிறுவனத்தின் கீழ் தனி உரிமையாளராக வியாபாரத்தை நடாத்திச் செல்லும் சியம்பிள்ளை சண்முகபிள்ளை கடனாளியாக புறக்கணித்துள்ளதாலும்,

மற்றும் கண்டி பிரசித்த நொத்தாரிசு கே. வீ. ஏ. டி. சீ. கே. விபுலசேன அவர்களால் 2015.07.17 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட ஈட்டுமுறி இல. 1594 என்ற கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீயின் பெயருக்கு எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஈட்டுமுறியின்கீழ், மேற்குறித்த ஈட்டுமுறியினுள் மற்றும்/ அல்லது கீழே குறிப்பிடப்பட்ட இரண்டாவது ஆதன இடாப்பில் விஸ்தரிக்கப்பட்டு விபரிக்கப்பட்டுள்ள காணி மற்றும் வளாகம் சம்பந்தமாக, பெற்றுக்கொள்ள வேண்டிய பணத்தொகை செலுத்துவதற்கு, திகன, புதியநகரம், இல. 23 என்ற விலாசத்தில் அமைந்துள்ள "ஷா பெக் இன்டஸ்ரீஸ்" இல் மேற்குறித்த சியம்பிள்ளை சண்முகபிள்ளை கடனாளியாக புறக்கணித்துள்ளதாலும்,

மற்றும் கண்டி பிரசித்த நொத்தாரிசு கே. வீ. ஏ. டி. சீ. கே. விபுலசேன அவர்களால் 2017.07.14 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட ஈட்டுமுறி இல. 2123 என்ற கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீயின் பெயருக்கு எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஈட்டுமுறியின்கீழ், மேற்குறித்த ஈட்டுமுறியினுள் மற்றும்/ அல்லது கீழே குறிப்பிடப்பட்ட

மூன்றாவது ஆதன இடாப்பில் விஸ்தரிக்கப்பட்டு விபரிக்கப்பட்டுள்ள காணி மற்றும் வளாகம் சம்பந்தமாக, பெற்றுக்கொள்ள வேண்டிய பணத்தொகை செலுத்துவதற்கு, திகன, புதிய நகரம், இல. 23 என்ற விலாசத்தில் அமைந்துள்ள "ஷா பெக் இன்டஸ்ரீஸ்" இல் மேற்குறித்த சியம்பிள்ளை சண்முகபிள்ளை கடனாளியாக புறக்கணித்துள்ளதாலும்,

மேற்குறித்த ஈட்டுமுறியின் கீழ் ரூபா நாற்பத்தொன்பது மில்லியன் அறுபத்தேழாயிரத்து இருநூற்றி இருபத்தொன்பது தசம் ஐம்பத்துநான்கு (ரூபா 49,067,229.54) பணத்தொகையை 2021.03.26 ஆந் திகதியாகும் பொழுது கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு தற்சமயம் வருமதியாக உள்ளதாலும், மேற்குறித்த ரூபா நாற்பத்தொன்பது மில்லியன்அறுபத்தேழாயிரத்து இருநூற்றி இருபத்தொன்பது தசம் ஐம்பத்துநான்கு (ரூபா 49,067,229.54) பணத்தொகையை பெற்றுக்கொள்வதற்காக மற்றும் 2021.03.27 ஆந் திகதியாகும் பொழுது விற்பனை தினம் வரை ரூபா 12,000,000.00 பணத்தொகையின் மீது வருடாந்தம் 15.5% வீதம், ரூபா. 13,725,000.00 பணத்தொகையின் மீது வருடத்திற்கு AWPLR + 2.50% வீதம் (வர்த்தமானிய வருடத்திற்கு 8.83%) வீதம் மற்றும் ரூபா.15,328,000.00 பணத்தொகையின் மீது 06 மாதத்திற்கு வருடத்திற்கு AWPLR + 4% வீதம் (வர்த்தமானிய வருடத்திற்கு 12.10%) வீதம் மேலதிக வட்டியோடு, பிரச்சார நடவடிக்கைகளுக்காக செலவிடும் மற்றும் வேறு செலவினங்கள் உள்ளடங்களாக தற்பொழுது பெற்றுக்கொள்ளும் பணத்தோடும் சேர்த்து கழித்து, மேற்குறித்த இல. 1593, 1862, 2183, 1594 மற்றும் 2123 என்ற ஈட்டுமுறியின் மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு அடகு வைக்கப்பட்டுள்ளதோடு, கீழே குறிப்பிடப்பட்ட ஆதன இடாப்பில் விஸ்தரிக்கப்பட்டு விபரிக்கப்பட்ட விபரத்தோடு, காணி மற்றும் வளாகம், கொழும்பு-12, புதுக்கடை வீதி, இலக்கம் 200, 2 ஆவது மாடியில் உத்தரவுபெற்ற ஏலதாரர் எல். பி. சேனாநாயக்க மூலம் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென, 1990 இல. 04 என்ற வங்கி மூலம் பிரசுரிக்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் 4 ஆவது சிறப்பு (விசேட ஏற்பாடுகள்), சட்டத்தின் அளிக்கப்பட்ட அதிகாரங்களுக்கமைவாக கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் இத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேல் சொல்லப்பட்ட முதலாவது ஆதன இடாப்பு

1. மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கண்டி மாநகர சபை எல்லையினுள் கங்கவட கோரளை பிரதேச செயலாளர் பிரிவில் 257 கண்டி கிராம சேவையாளர் பிரிவினுள் கொடுகொடல்ல வீதி, முன்னர் காசல் ஹில் வீதி, வரிமதிப்பீட்டு இல. 17 என்ற விலாசத்தில் அமைந்துள்ள கட்டிடத்தோடு அதிகாரம்பெற்ற நில அளவையாளர் பி. பி. ருபசிங்க அவர்களால் 2004.12.05 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட இல. 3255 என்ற வரைபடத்தில் பிரித்து வேறாக்கப்பட்ட லொட் 1 என காண்பிக்கப்பட்ட காணிப்பகுதி எல்லையாக, வடக்கிற்கு : கொடுகொடல்ல ஒழுங்கை வரிமதிப்பீட்டு இல. 11 என்ற வளாகம் மற்றும் கொடுகொடல்ல வீதி, வரிமதிப்பீட்டு இல. 19 என்ற வளாகம், கிழக்கிற்கு : கொடுகொடல்ல வீதி, தெற்கிற்கு : கொடுகொடல்ல வீதி, வரிமதிப்பீட்டு இல. 15 என்ற வளாகம் மற்றும் மேற்கிற்கு : இந்த திட்டத்தின் லொட் 02 என்ற எல்லையாக வரைபடத்தின் பிரகாரம் (ஏ0- றூ0- பே0.9875) விசாலமுடைய காணியோடு, கட்டிடங்கள் அனைத்து சகலதும். இது கண்டி காணிப்பதிவுக் காரியாலயத்தில் இருமடிப்புத் தாளில் A 547/134 இன் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

2. மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கண்டி மாநகர சபை எல்லையினுள் கங்கவட கோரளை பிரதேச செயலாளர் பிரிவில் 257 கண்டி கிராம சேவையாளர் பிரிவினுள் கொடுகொடல்ல வீதி, முன்னர் காசல் ஹில் வீதி, வரிமதிப்பீட்டு இல. 17 என்ற விலாசத்தில் அமைந்துள்ள கட்டிடத்தோடுஅதிகாரம்பெற்ற நில அளவையாளர் பி. பி. ருபசிங்க அவர்களால் 2004.12.05 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட இல. 3255 என்ற வரைபடத்தில் பிரித்து வேறாக்கப்பட்ட லொட் 2 என காண்பிக்கப்பட்ட காணிப்பகுதி எல்லையாக, வடக்கிற்கு : கொடுகொடல்ல ஒழுங்கை வரிமதிப்பீட்டு இல. 11 என்ற வளாகம், கிழக்கிற்கு: அந்த திட்டத்தின் லொட் 1, தெற்கிற்கு : கொடுகொடல்ல வீதி, வரிமதிப்பீட்டு இல. 15 என்ற வளாகம் மற்றும் மேற்கிற்கு: கொடுகொடல்ல ஒழுங்கை முன்னர் காசல் காணி எல்லையாக வரைபடத்தின் பிரகாரம் (ஏ0- றூ0- பே0.7750) விசாலமுடைய காணியோடு, கட்டிடங்கள் அனைத்து சகலதும். இது கண்டி காணிப்பதிவுக் காரியாலயத்தில் இருமடிப்புத் தாளில் A547/ 132 இன் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

**மேல் சொல்லப்பட்ட இரண்டாவது ஆதன இடாப்பு**

1. மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், பாததும்பர தற்பொழுது மெததும்பர பாலிஸ்பத்து மேற்கு கோரளையில் மெததும்பர பிரதேச சபை எல்லையினுள் மெததும்பர பிரதேச செயலாளர் பிரிவினுள் நிதுலேமட கிராம சேவையாளர் பிரிவினுள் பொதவெல்கெடிய கம்மெதையில் அமைந்துள்ள "ஏகொடஹவத்த" என்ற பெயருடைய காணிக்கு அதிகாரம்பெற்ற நில அளவையாளர் எஸ். அபேசுந்தர அவர்களால் 2000.05.26 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட இல. 1078 என்ற வரைபடத்தில் பிரித்து வேறாக்கப்பட்ட லொட் 02 என காண்பிக்கப்பட்ட காணிப்பகுதி எல்லையாக, வடக்கிற்கு : பிரதான வீதியிலிருந்து கம்மெத மற்றும் வீடு செல்லும் பாதை, கிழக்கிற்கு : அந்த வரைபடத்தின் லொட் 3, தெற்கிற்கு : அந்த வரைபடத்தில் லொட் 1 மற்றும் மேற்கிற்கு : பிரதான வீதி இருந்து கம்மெத மற்றும் வீடு செல்லும் பாதை எல்லையாக மேற்குறித்த வரைபடத்தின் பிரகாரம் (ஏ0- றூ0- பே8.10) விசாலமுடைய காணியோடும், கட்டிடங்கள் அனைத்து சகலதும். இது கண்டி காணிப்பதிவுக் காரியாலயத்தில் இருமடிப்புத்தாள் S93/ 273 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், பாததும்பர தற்பொழுது மெததும்பர பாலிஸ்பத்து மேற்கு கோரளையில் மெததும்பர பிரதேச சபை எல்லையினுள் மெததும்பர பிரதேச செயலாளர் பிரிவினுள் நிதுலேமட கிராம சேவையாளர் பிரிவினுள் பொதவெல்கெடிய கம்மெதையில் அமைந்துள்ள "ஏகொடஹவத்த" என்ற பெயருடைய காணிக்கு அதிகாரம்

பெற்ற நில அளவையாளர் எஸ். அபேசுந்தர அவர்களால் 2000.05.26 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட இல. 1078 என்ற வரைபடத்தில் பிரித்து வேறாக்கப்பட்ட லொட் 03 என காண்பிக்கப்பட்ட காணிப்பகுதி எல்லையாக, வடக்கிற்கு : பிரதான வீதியிலிருந்து கம்மெத வரை பாதை, கிழக்கிற்கு : அந்த வரைபடத்தின் லொட் 4, தெற்கிற்கு : அந்த வரைபடத்தில் லொட் 1 மற்றும் மேற்கிற்கு : அந்த வரைபடத்தின் லொட் 2 எல்லையாக மேற்குறித்த வரைபடத்தின் பிரகாரம் (ஏ0- றூ0- பே20.20) விசாலமுடைய காணியோடும், கட்டிடங்கள் அனைத்து சகலதும். இது கண்டி காணிப்பதிவுக் காரியாலயத்தில் இருமடிப்புத்தாள் S 167/145 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**மேல் சொல்லப்பட்ட மூன்றாவது ஆதன இடாப்பு**

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், மெததும்பர பாலிஸ்பத்து மேற்கு கோரளையில் மெததும்பர பிரதேச சபை எல்லையினுள் மெததும்பர பிரதேச செயலாளர் பிரிவினுள் செனரத்வெல கிராம சேவையாளர் பிரிவினுள் ஹெனகெஹுவெல மெதகம்மெத்தையில் அமைந்துள்ள "கல்ஒருவேஹென மற்றும் ஹெனகெஹுவெல எஸ்டேட்" என்ற பெயருடைய காணிக்கு அதிகாரம்பெற்ற நில அளவையாளர் டி. பி. எஸ். சன்கரன்தேனிய அவர்களால் 2017.05.06 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட இல. 10306 என்ற வரைபடத்தில் பிரித்து வேறாக்கப்பட்ட லொட் 01 என காண்பிக்கப்பட்ட முக்கோண வடிவான காணிப்பகுதியின் எல்லையாக, வடக்கிற்கு : இல. 2897 என்ற வரைபடத்தில் லொட் 4, கிழக்கிற்கு - தென்கிழக்கு: வீதி (திகன வீதி இருந்து செனரத்வெல அறிமுக பாதை) மற்றும் மேற்கிற்கு: மஹபெரியதென்ன எஸ்டேட் எல்லையாக மேற்குறித்த வரைபடத்தின் பிரகாரம் (ஏ2- றூ0- பே20.00) விசாலமுடைய காணியோடும், கட்டிடங்கள் அனைத்து சகலதும்.

மேற்குறித்த காணி கீழே காண்பிக்கப்பட்ட கூட்டிணைக்கப் பட்ட காணிப்பகுதியில் பிரிக்கப்பட்ட எல்லையாக்கப்பட்ட பகுதியாகும், அதாவது,

1. மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், மெததும்பர பாலிஸ்பத்து மேற்கு கோரளையில் மெததும்பர பிரதேச சபை எல்லையினுள் மெததும்பர பிரதேச செயலாளர் பிரிவினுள் செனரத்வெல கிராம சேவையாளர் பிரிவினுள் ஹெனகெஹுவெல மெதகம்மெத்தையில் அமைந்துள்ள "கல்ஒருவேஹென மற்றும் ஹெனகெஹுவெல எஸ்டேட்" என்ற பெயருடைய காணிக்கு அதிகாரம் பெற்ற நில அளவையாளர் டி.பி.அத்தநாயக்க அவர்களால் 1992.07.04 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட இல. 2897 என்ற வரைபடத்தில் பிரித்து வேறாக்கப்பட்ட லொட் 5 என காண்பிக்கப்பட்ட காணிப்பகுதியின் எல்லையாக, வடக்கிற்கு : லொட் 4, கிழக்கிற்கு: VC பாதை மற்றும் லொட் 6, தெற்கு-தென்மேற்கு: லொட் 6, ஜீவ வெட மற்றும் கம்பிவேலி எல்லையாக மேற்குறித்த வரைபடத்தின் பிரகாரம் (ஏ1- றூ2- பே00.00) விசாலமுடைய காணியோடும், கட்டிடங்கள் அனைத்து சகலதும். இது கண்டி காணிப்பதிவுக் காரியாலயத்தில் இருமடிப்பு S104/ 275 இன்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், மெததும்பர பாலிஸ்பத்து மேற்கு கோரளையில் மெததும்பர பிரதேச சபை எல்லையினுள் மெததும்பர பிரதேச செயலாளர் பிரிவினுள் செனரத்வெல கிராம சேவையாளர் பிரிவினுள் ஹெனகெஹுவெல மெதகம்மெத்தையில் அமைந்துள்ள "கல்ஒருவேஹென மற்றும் ஹெனகெஹுவெல எஸ்டேட்" என்ற பெயருடைய காணிக்கு அதிகாரம்பெற்ற நில அளவையாளர் டி. பி. அத்தநாயக்க அவர்களால் 1992.07.04 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட இல. 2897 என்ற வரைபடத்தில் பிரித்து வேறாக்கப்பட்ட லொட் 6 என காண்பிக்கப்பட்ட காணிப்பகுதியின் எல்லையாக, வடக்கிற்கு : லொட் 5, கிழக்கிற்கு : VC பாதை, தெற்கு-தென்மேற்கு : VC பாதை, ஜீவ வெட மற்றும் கம்பிவேலி எல்லையாக மேற்குறித்த வரைபடத்தின் பிரகாரம் (ஏ0- றூ2- பே20.00) விசாலமுடைய காணியோடும், கட்டிடங்கள் அனைத்து சகலதும். இது கண்டி காணிப்பதிவுக் காரியாலயத்தில் இருமடிப்பு S 104/ 275 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஆர். ஏ. பி. ராஜபக்ஷ,
கம்பனிச் செயலாளர்.

2021, மே 24.

08-381

---

**கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் 4 ஆவது சிறப்பு சட்டப்படி கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ (பதிவு இலக்கம் PQ 116) பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

கிளை : தங்கொடுவ
கடன் கணக்கு இலக்கம் : 2363590 மற்றும் 2363597
பிடியகே தோன் சஞ்ஜே தில்ஹான் அப்புஹாமி மற்றும் ஜயகொடி ஆராச்சிகே ஆலோகா சேனானி

2021.04.28 ஆந் திகதி கூடிய கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையின் கூட்டத்தில் பின்வருமாறு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வைக்களை பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. என். ஐ. எஸ். யூ. பர்னாந்து அவர்களால் 2013.07.18 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட ஈட்டுமுறி இல. 9475, 2014.10.30 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட ஈட்டுமுறி இல. 11817, 2017.09.13 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட ஈட்டுமுறி இல. 17263 மற்றும் 2018.02.26 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட ஈட்டுமுறி இல. 17993 என்ற கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு பெயருக்கு எழுதி கைச்சாத்திடப்பட்ட ஈட்டுமுறியின்கீழ், மேற்குறித்த ஆதன இடாப்பில் மற்றும்/ அல்லது முதலாவது ஆதன இடாப்பில் விஸ்தரிக்கப்பட்டு விபரிக்கப்பட்டுள்ள காணி

மற்றும் வளாகம் சம்பந்தமாக பெற்றுக்கொள்ள வேண்டிய பணத்தொகையை செலுத்துவதற்கு, தங்கொடுவ, போலவத்த வீதி, இல. 122 இல் வசிக்கும் பிடியகே தோன் சஞ்ஜே தில்ஹான் அப்புஹாமி மற்றும் ஜயகொடி ஆராச்சிகே ஆலோகா சேனானி கடனாளியாக புறக்கணித்துள்ளதாலும்,

மற்றும் நீர்கொழும்பு பிரசித்த நொத்தாரிசு பி. ஏ. எம். டி. பெரேரா அவர்களால் 2017.09.13 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட ஈட்டுமுறி இல. 600 என்ற கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு பெயருக்கு எழுதி கைச்சாத்திடப்பட்ட ஈட்டுமுறியின்கீழ், மேற்குறித்த ஆதன இடாப்பில் மற்றும்/ அல்லது இரண்டாவது ஆதன இடாப்பில் விஸ்தரிக்கப்பட்டு விபரிக்கப்பட்டுள்ள காணி மற்றும் வளாகம் சம்பந்தமாக பெற்றுக்கொள்ள வேண்டிய பணத்தொகையை செலுத்துவதற்கு, பிடியகே தோன் சஞ்ஜே தில்ஹான் அப்புஹாமி மற்றும் ஜயகொடிஆராச்சிகே ஆலோகா சேனானி கடனாளியாக புறக்கணித்துள்ளதாலும்,

அத்தோடு மேற்குறித்த ஈட்டுமுறியின்கீழ் நீண்டகால இல. 2363590 மற்றும் 2363597 காரணமாக பத்தொன்பது மில்லியன் நான்கு இலட்சத்து ஐம்பதாயிரத்து நானூற்றி தொண்ணூற்றி மூன்று தசம் இருபத்தொன்று (ரூபா 19,450,493.21) முழுப் பணத்தொகையை 2021.02.17 ஆந் திகதியாகும் பொழுது கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு தற்சமயம் வருமதியாக உள்ளதாலும், மேற்குறித்த பத்தொன்பது மில்லியன் நான்கு இலட்சத்து ஐம்பதாயிரத்து நானூற்றிதொண்ணூற்றி மூன்று தசம் இருபத்தொன்று (ரூபா. 19,450,493.21) பணத்தொகையை பெற்றுக்கொள்வதற்காக மற்றும் 2021.02.18 ஆந் திகதி விற்பனை தினம் வரையான காலத்திற்கு ரூபா 7,325,000.00 பணத்தொகையின் மீது வருடத்திற்கு 16.00% வீதம் மற்றும் ரூபா 8,150,000.00 பணத்தொகையின் மீது வருடத்திற்கு 15.50% வீதம் மேலதிக வட்டியோடு, பிரச்சார நடவடிக்கைகளுக்காக செலவிடும் மற்றும் வேறு செலவினங்கள் உள்ளடங்கலாக தற்பொழுது பெற்றுக்கொள்ளும் பணத்தோடும் சேர்த்து கழித்து, மேற்குறித்த இல. 9475, 11817, 17263, 17993 மற்றும் 600 என்ற ஈட்டுமுறியின் மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு அடகு வைக்கப்பட்டுள்ளதோடு, கீழே குறிப்பிடப்பட்ட ஆதன இடாப்பில் விஸ்தரிக்கப்பட்டு விபரிக்கப்பட்ட விபரத்தோடு, காணி மற்றும் வளாகம் கொழும்பு-12, புதுக்கடை வீதி, இலக்கம் 200, 2 ஆவது மாடியில் ஏலதாரருக்கு திரிவின்கா சேனாநாயக்க உத்தரவுபெற்ற ஏலதாரர் எல். பி. சேனாநாயக்க மூலம் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**மேல் சொல்லப்பட்ட முதலாவது ஆதன இடாப்பு**

வயம்ப மாகாணம், புத்தளம் மாவட்டம், மாரவில பதிவு செய்யும் பிரிவினுள் பிடிகல் கோரளை தெற்கு ஒதர மாகாணம், கோணவில தெற்கு கிராம சேவையாளர் பிரிவில் மற்றும் தங்கொடுவ பிரதேச செயலாளர் பிரிவில் வென்னப்புவ பிரதேச சபை எல்லையினுள் கோணவில கிராமத்தில் அமைந்துள்ள "மில்லகஹவத்த" என்ற பெயருடைய காணிக்கு அதிகாரம்பெற்ற நில அளவையாளர் ஜீ. ஏ. எச். குணதிலக அவர்களால் 2013.05.11 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட இல. 2653 என்ற வரைபடத்தில் பிரித்து வேறாக்கப்பட்ட லொட் 01 என காண்பிக்கப்பட்ட காணிப்பகுதியின் எல்லையாக, வடக்கு: சியதோரிஸ் மதுராவலகே என்பவருடைய காணி, கிழக்கிற்கு: எப்பா, தெற்கிற்கு : டி. வீ. அந்தோனி பெரேராவின் காணி மற்றும் ஏ. கமணி பெரேராவின் காணி மற்றும் மேற்கிற்கு: வீதி (2.5) எல்லையாக வரைபடத்தின் பிரகாரம் (ஏ1- றூ0- பே24.5) விசாலமுடைய காணியோடு, இலைகுலை, பயிர்ச்செய்கை அனைத்தும் சகலதும் (மாரவில காணிப்பதிவு செய்யும் காரியாலயத்தில் இருமடிப்பு E220/75 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது).

**மேல் சொல்லப்பட்ட இரண்டாவது ஆதன இடாப்பு**

வயம்ப மாகாணம், புத்தளம் மாவட்டம், மாரவில பதிவு செய்யும் பிரிவினுள், தங்கொடுவ பிரதேச செயலாளர் பிரிவினுள், கொடல்ல இல. 473 என்ற கிராம சேவையாளர் பிரிவினுள் வென்னப்புவ பிரதேச சபை எல்லையினுள் பிடிகல் கோரளை தெற்கு ஒதர மாகாணம், கொடல்ல கிராமத்தில் அமைந்துள்ள "தமின்னகஹவத்தையில் பிரிக்கப்படாத பகுதி" என்ற பெயருடைய காணிக்கு அதிகாரம்பெற்ற நில அளவையாளர் வீ. எப். வர்ணகுலசூரிய அவர்களால் 1964.05.28 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட இல. 6715 என்ற வரைபடத்தில் பிரித்து வேறாக்கப்பட்ட லொட் இல. 02 என காண்பிக்கப்பட்ட காணிப்பகுதியின் எல்லையாக, வடக்கிற்கு: பிரதேச சபை வீதி (தம்பரவில இருந்து தங்கொடுவ மற்றும் கோணவில வரை), கிழக்கிற்கு : அதிகாரம்பெற்ற நில அளவையாளர் வீ. எப். வர்ணகுலசூரிய அவர்களால் 1964.05.28 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட இல. 6715 என்ற வரைபடத்தில் லொட் 1, தெற்கிற்கு : பி. எப். மலயப்பா புல்லேகே உரிமைக் காணி, மேற்கிற்கு : டி. ஜே. பெரேராவின் உரிமைக் காணி எல்லையாக வரைபடத்தின் பிரகாரம் (ஏ1- றூ0- பே14) விசாலமுடைய காணியோடும், கட்டிடங்கள், இலைகுலை, பயிர்ச்செய்கை அனைத்து சகலதும். இது மாரவில காணிப்பதிவு காரியாலயத்தில் இருமடிப்புத்தாளில் E127/ 145 இன் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

ஆனால், மேற்குறித்த காணி மீண்டும் அளந்து கீழே விபரிக்கப்பட்டுள்ளது :

வயம்ப மாகாணம், புத்தளம் மாவட்டம், மாரவில பதிவு செய்யும் பிரிவினுள், தங்கொடுவ பிரதேச செயலாளர் பிரிவினுள், கொடல்ல இல. 473 என்ற கிராம சேவையாளர் பிரிவினுள் வென்னப்புவ பிரதேச சபை எல்லையினுள் பிடிகல் கோரளை தெற்கு ஒதர மாகாணம், கொடல்ல கிராமத்தில் அமைந்துள்ள "தமின்னகஹவத்தை" என்ற பெயருடைய காணிக்கு அதிகாரம்பெற்ற நில அளவையாளர் எம். ஜீ. எஸ். சமரதுங்க அவர்களால் 1990.10.20 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட இல. 3508 என்ற வரைபடத்தில் பிரித்து வேறாக்கப்பட்ட லொட் இல. 01 என காண்பிக்கப்பட்ட காணிப்பகுதியின் எல்லையாக, வடக்கிற்கு : பிரதேச சபை வீதி (தம்பரவில இருந்து தங்கொடுவ மற்றும் கோணவில வரை, கிழக்கிற்கு: அதிகாரம்பெற்ற நில அளவையாளர் வீ. எப். வர்ணகுலசூரிய

அவர்களால் 1964.05.28 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட இல. 6715 என்ற வரைபடத்தில் லொட் 1, தெற்கிற்கு : பி. எப். மலயப்பா புல்லேகே உரிமைக் காணி, மேற்கிற்கு : டி. ஜே. பெரேராவின் உரிமைக் காணி எல்லையாக வரைபடத்தின் பிரகாரம் (ஏ1- றூ0- பே21) விசாலமுடைய காணியோடும், கட்டிடங்கள், இலைகுலை, பயிர்ச்செய்கை அனைத்து சகலதும்.

ஆனால் கீழே காணியின் மேலும் அளந்து கீழே விபரிக்கப் பட்டுள்ளது.

வயம்ப மாகாணம், புத்தளம் மாவட்டம், மாரவில பதிவு செய்யும் பிரிவினுள், தங்கொடுவ பிரதேச செயலாளர் பிரிவினுள், கொடல்ல இல. 473 என்ற கிராம சேவையாளர் பிரிவினுள் வென்னப்புவ பிரதேச சபை எல்லையினுள் பிடிகல் கோரளை தெற்கு ஒதர மாகாணம், கொடல்ல கிராமத்தில் அமைந்துள்ள "தம்மின்னகஹவத்தை" என்ற பெயருடைய காணிக்கு அதிகாரம்பெற்ற நில அளவையாளர் யூ. எஸ். கே. எதிரிசிங்க அவர்களால் 2017.05.26 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட இல. 5442 என்ற வரைபடத்தில் பிரித்து வேறாக்கப்பட்ட லொட் இல. 01 என காண்பிக்கப்பட்ட காணிப்பகுதியின் எல்லையாக, வடக்கிற்கு : பிரதேச சபை வீதி (தும்பரவில இருந்து தங்கொடுவ மற்றும் கோணவில வரை), கிழக்கிற்கு : கொடல்ல றோமன் கத்தோலிக்க தேவாலயத்தின் காணி, தெற்கிற்கு : கொடல்ல றோமன் கத்தோலிக்க தேவாலயத்தின் உரிமைக் காணி மற்றும் எப். சீ. பர்னாந்துபுள்ளே அவர்களின் உரிமைக்காணி, மேற்கிற்கு : ஜே. ஏ. டி. பி. ஆர். அப்புஹாமி அவர்களின் உரிமைக் காணி எல்லையாக வரைபடத்தின் பிரகாரம் (ஏ1- றூ0- பே17.7) விசாலமுடைய காணியோடும், கட்டிடங்கள், இலைகுலை, பயிர்ச்செய்கை அனைத்து சகலதும்.

ஆர். ஏ. பி. ராஜபக்ஷ,
கம்பனிச் செயலாளர்.

2021, மே 24.

08-382

---

## கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் 4 ஆவது சிறப்பு சட்டப்படி கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ (பதிவு இலக்கம் PQ 116) பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

கடன் கணக்கு இலக்கம் : 2319677
மனோகரன் சதீஸ்குமார்

2019.07.26 ஆந் திகதி கூடிய கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையின் கூட்டத்தில் பின்வருமாறு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு பிரசித்த நொத்தாரிசு வீ. வினோபா அவர்களால் 2012.05.16 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட ஈட்டுமுறி இல. 16805, 2013.10.16 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட ஈட்டுமுறி இல. 17523, 2015.12.30 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட ஈட்டுமுறி இல. 18500 மற்றும் 2016.12.07ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட ஈட்டுமுறி இல. 18797 என்ற கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு பெயருக்கு எழுதி கைச்சாத்திடப்பட்ட ஈட்டுமுறியின் கீழ், மேற்குறித்த ஆதன இடாப்பில் மற்றும்/ அல்லது முதலாவது ஆதன இடாப்பில் விஸ்தரிக்கப்பட்டு விபரிக்கப்பட்டுள்ள காணி மற்றும் வளாகம் சம்பந்தமாக பெற்றுக்கொள்ள வேண்டிய பணத்தொகையை செலுத்துவதற்கு, மனோகரன் சதீஸ்குமார் கடனாளியாக புறக்கணித்துள்ளதாலும்,

அத்தோடு மேற்குறித்த ஈட்டுமுறியின் கீழ் பன்னிரண்டு மில்லியன் மூன்று இலட்சத்து நூற்றி இருபத்தாறு தசம் இருபத்தாறு (ரூபா 12,300,126.26) ரூபா பணத்தொகையை 2019.06.19 ஆந் திகதியாகும் பொழுது கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு தற்சமயம் வருமதியாக உள்ளதாலும், மேற்குறித்தபன்னிரண்டு மில்லியன் மூன்று இலட்சத்து நூற்றி இருபத்தாறு தசம் இருபத்தாறு (ரூபா 12,300,126.26) பணத்தொகையைப் பெற்றுக்கொள்வதற்காக மற்றும் விற்பனை தினம் வரையான காலத்திற்கு ரூபா 11,325,000.00 பணத்தொகையின் மீது வருடத்திற்கு 16.00% வீதம், மேலதிக வட்டியோடு, பிரச்சார நடவடிக்கைகளுக்காக செலவிடும் மற்றும் வேறு செலவினங்கள் உள்ளடங்கலாக தற்பொழுது பெற்றுக்கொள்ளும் பணத்தோடும் சேர்த்து கழித்து, மேற்குறித்த இல. 16805, 17523, 18500 மற்றும் 18797 என்ற ஈட்டுமுறியின் மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு அடகு வைக்கப்பட்டுள்ளதோடு, கீழே குறிப்பிடப்பட்ட ஆதன இடாப்பில் விஸ்தரிக்கப்பட்டு விபரிக்கப்பட்ட விபரத்தோடு, காணி மற்றும் வளாகம் கொழும்பு-12, புதுக்கடை வீதி, இலக்கம் 200, 2 ஆவது மாடியில் ஏலதாரருக்கு திரிவின்கா சேனாநாயக்க உத்தரவுபெற்ற ஏலதாரர் எல். பி. சேனாநாயக்க மூலம் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### மேல் சொல்லப்பட்ட ஆதன இடாப்பு

கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டம், மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவினுள் இல. Sub என்ற மட்டக்களப்பு மாநகர சபை எல்லையினுள் கொட்டுகுளம் கிராம சேவையாளர் பிரிவில் கொதுகுளம் கிராமத்தில், திருகோணமலை வீதி, இல. 625/ 2 என்ற இடத்தில் அமைந்துள்ள "றின்க்வூட் எஸ்டேட்" என்ற பெயருடைய காணிக்கு அதிகாரம்பெற்ற நில அளவையாளர் எஸ். சங்கரலிங்கம் அவர்களால் 2007.12.15 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட இல. MN/ 130/ 2007 என்ற வரைபடத்தில் லொட் இல. 03 என அடையாளப்படுத்தப்பட்ட காணிப்பகுதியான, அதிகாரம்பெற்ற நில அளவையாளர் அந்தோனிப்பிள்ளை அவர்களால் 2009.08.30 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட இல. SA/ 636B/ 2009/ MN என்ற வரைபடத்தில் லொட் 2 என அடையாளப்படுத்தப்பட்டு பிரித்து காண்பிக்கப்பட்ட பகுதியான மற்றும் அதிகாரம்பெற்ற நில அளவையாளர் ஏ. ஈ. கே. திஸ்ஸ வீரசிங்க அவர்களால் 2011.12.02 ஆந் திகதியுடைய அளவை இல. 1625/ 2011

என்ற வரைபடத்தில் லொட் இல. 01 என மீண்டும் அளந்த விபரங்களோடு காண்பிக்கப்பட்ட எல்லையாக, வடக்கிற்கு : எம். சதீஸ்குமார் மற்றும் மனைவி சுகந்திக்கு உரிமையான காணி, கிழக்கிற்கு : காணி கட்டியெழுப்பும் சபைக்கு உரிமையான ரின்க்வூட் எஸ்டேட் காணி, தெற்கிற்கு : SA/ 636B/ 2009/ MN என்ற வரைபடத்தில் லொட் 3 மற்றும் மேற்கிற்கு: திருகோணமலை வீதியைக் காண்பிக்கும் 6 மீட்டர் அகல பாதை எல்லையாக வரைபடத்தின் பிரகாரம் (ஏ0- றூ0- பே30) விசாலமுடைய காணியோடும், கட்டிடங்கள், இலைகுலை, பயிர்ச்செய்கை அனைத்து சகலதும். இது மட்டக்களப்பு காணிப்பதிவுக் காரியாலயத்தில் இருமடிப்புத்தாள் E0013/ 08 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஆர். ஏ. பி. ராஜபக்ஷ,
கம்பனிச் செயலாளர்.

2019, ஓகத்து 05.

08-383

---

## கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் 4 ஆவது சிறப்பு சட்டப்படி கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ (பதிவு இலக்கம் PQ 116) பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

கையடக்க கணக்கு இலக்கம் : 1951351501
கடன் கணக்கு இலக்கம் : 1917693, 2062399, 2114192 மற்றும் 2161982
இகோ டெக் க்றியேட் 21 கம்பனி (பிறைவேட்) லிமிட்டெட்

2019.09.27 ஆந் திகதி கூடிய கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையின் கூட்டத்தில் பின்வருமாறு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஜே. எம். பி. எஸ். ஜயவீர அவர்களால். 2015.07.21 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட ஈட்டுமுறி இல. 2785 மற்றும் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. எல். ஜயவீர அவர்களால் 2017.04.06 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட ஈட்டுமுறி இல. 4836 என்ற கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு பெயருக்கு எழுதி கைச்சாத்திடப்பட்ட ஈட்டுமுறியின் கீழ் பெற்றுக்கொள்ள வேண்டிய பணத்தொகையை செலுத்துவதற்கு, ஸ்ரீலங்கா சட்டத்தின்கீழ் முறையாக கூட்டிணைக்கப்பட்ட கம்பனியான கட்டுநாயக்க, ஆடிஅம்பலம், கிம்புலாபிடிய வீதி, இல. 249 என்ற விலாசத்தில் பதிவுசெய்யப்பட்ட காரியாலயத்தில் அமைந்துள்ள இகோ டெக் க்றியேட் 21 கம்பனி (பிறைவேட்) லிமிட்டெட் கடனாளியாக புறக்கணித்துள்ளதாலும், அத்தோடு (கீழே விபரிக்கப்பட்ட 1 ஆவது ஆதன இடாப்பில் விஸ்தரிக்கப்பட்டு விபரிக்கப்பட்ட காணி)

2015.08.18 ஆந் திகதி இல. FCC/ 2015/ 77 என்ற கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு பெயருக்கு எழுதி கைச்சாத்திடப்பட்ட ஈட்டுமுறியின் கீழ் பெற்றுக்கொள்ள வேண்டிய பணத்தொகையை செலுத்துவதற்கு, ஸ்ரீலங்கா சட்டத்தின் கீழ் முறையாக கூட்டிணைக்கப்பட்ட கம்பனியான, கட்டுநாயக்க, ஆடிஅம்பலம், கிம்புலாபிடிய வீதி, இல. 249 என்ற விலாசத்தில் பதிவு செய்யப்பட்ட காரியாலயத்தில் அமைந்துள்ள இகோ டெக் க்றியேட் 21 கம்பனி (பிரைவட்) லிமிட்டெட் கடனாளியாக புறக்கணித்துள்ளதாலும், அத்தோடு (கீழே விபரிக்கப்பட்ட 2 ஆவது ஆதன இடாப்பில் விஸ்தரிக்கப்பட்டு விபரிக்கப்பட்ட இயந்திர உபகரணங்கள்)

அத்தோடு மேற்குறித்த ஈட்டுமுறியின் கீழ் அமெரிக்க டொலர்ஸ் ஒரு மில்லியன் ஏழு இலட்சத்து நாற்பத்து மூவாயிரத்து எண்ணூற்றி எண்பத்துநான்கு தசம் இருபது (அமெ.டொ. 1,743,884.20), (அல்லது அதற்கு சமமான ஸ்ரீலங்கா ரூபாய்களின்) பணத்தொகையை 2019.07.04 ஆந் திகதியாகும் பொழுது கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு தற்சமயம் வருமதியாக உள்ளதாலும், மேற்குறித்த அமெரிக்க டொலர்ஸ் ஒரு மில்லியன் ஏழு இலட்சத்து நாற்பத்து மூவாயிரத்து எண்ணூற்றிஎண்பத்து நான்கு தசம் இருபது (அமெ. டொ. 1,743,884.20) (அல்லது அதற்கு சமமான ஸ்ரீலங்கா ரூபாய்களின்) பணத்தொகையை பெற்றுக்கொள்வதற்காக மற்றும் 2019.07.05 ஆந் திகதியாகும் பொழுது விற்பனை தினம் வரையான காலத்திற்கு அமெ. டொ. 111,717.52 (அல்லது அதற்கு சமமான ஸ்ரீலங்கா ரூபாய்களின்) பணத்தொகையின் மீது வருடத்திற்கு 9.898% வீதம், அமெ. டொ. 814,250.00 பணத்தொகையின் மீது வருடத்திற்கு LIBOR + 5.5% வீதம், வர்த்தமானிய படி வருடத்திற்கு 7.898% வீதம் மற்றும் அமெ. டொ. 186,660.00 பணத்தொகையின் மீது 06 மாதங்களுக்கு வருடத்திற்கு LIBOR + 5.5% வீதம், வர்த்தமானிய படி வருடத்திற்கு 7.7005% வீதம் மற்றும் அமெ. டொ. 150,000.00 பணத்தொகையின் மீது 1 மாதத்திற்கு வருடத்திற்கு LIBOR + 6% வீதம் வர்த்தமானிய வருடத்திற்கு 8.398% வீதம், மேலதிக வட்டியோடு, பிரச்சார நடவடிக்கைகளுக்காக செலவிடும் மற்றும் வேறு செலவினங்கள் உள்ளடங்கலாக தற்பொழுது பெற்றுக்கொள்ளும் பணத்தோடும் சேர்த்து கழித்து, மேற்குறித்த இல. 2785, 4836 மற்றும் இல. FCC/ 2015/ 77 என்ற ஈட்டுமுறியின் மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு அடகு வைக்கப்பட்டுள்ளதோடு, கீழே குறிப்பிடப்பட்ட ஆதன இடாப்பில் விஸ்தரிக்கப்பட்டு விபரிக்கப்பட்ட விபரத்தோடு, காணி மற்றும் வளாகம் கொழும்பு-12, புதுக்கடைவீதி, இலக்கம் 200, 2வது மாடியில் ஏலதாரருக்கு திரிவின்கா சேனாநாயக்க உத்தரவுபெற்ற ஏலதாரர் எல். பி. சேனாநாயக்க மூலம் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### மேல் சொல்லப்பட்ட முதலாவது ஆதன இடாப்பு

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அளுத்குரு கோரளை, தாசியாபத்து நீர்கொழும்பு பதிவு செய்யும் காரியாலயத்தில்

பதிவு செய்யும் பிரிவினுள் மினுவாங்கொட பிரதேச சபை எல்லையினுள் மினுவாங்கொட பிரதேச செயலாளர் பிரிவில் 123/ 4, யடியன மத்தி கிராம சேவையாளர் பிரிவில் யடியன கிராமத்தில் அமைந்துள்ள ருக்அத்தனகஹவத்த என்ற பெயருடைய காணிக்கு அதிகாரம்பெற்ற நிலஅளவையாளர் பி. டி. என். பீரிஸ் அவர்களால் 2010.03.22 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட இல. 4149 என்ற வரைபடத்தில் பிரித்து வேறாக்கப்பட்ட லொட் 1 என காண்பிக்கப்பட்ட காணிப்பகுதி (அதிகாரம்பெற்ற நில அளவையாளர் இந்திரதிஸ்ஸ கொடம்பகே அவர்களால் 2006.02.02 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட இல. 24/ 2006 என்ற வரைபடத்தில் லொட் 1 மற்றும் அதிகாரம்பெற்ற நில அளவையாளர் டபிள்யூ. ஏ. பர்னாந்து அவர்களால் 1976.03.03 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட இல. 2038 என்ற வரைபடத்தில் காண்பிக்கப்பட்ட காணியின் மிகுதிப்பகுதி ஒன்றிணைக்கப்பட்ட எல்லையாக, வடக்கிற்கு : பாதை (RDA), கிழக்கிற்கு : டி. எல். அபேசேகர அவர்களின் உரிமைக் காணி, தெற்கிற்கு : டி. எல். அபேசேகர மற்றும் வேறு நபர்களின் உரிமையான வயல் மற்றும் மேற்கிற்கு : சம்பத் மற்றும் வேறு நபரின் காணி மற்றும் வீதி (தனியார்). எல்லைகளாக மேற்குறித்த இல. 4149 என்ற வரைபடத்தின் பிரகாரம் (ஏ2- ரூ0- பே35) விசாலமுடைய காணியோடு மற்றும் கட்டிடம், இலைகுலை, பயிர்செய்கை மற்றும் அனைத்து சகலதும். இது நீர்கொழும்பு காணிப்பதிவுக் காரியாலயத்தில் இருமடிப்பு C 988/ 86 கீழ்பதிவுசெய்யப்பட்டுள்ளது.

### மேற்சொல்லப்பட்ட இரண்டாவது ஆதன இடாப்பு

இலங்கைச் சனநாயக குடியரசின், மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், யடியன, மினுவாங்கொட வீதி, இல. 298B என்ற இடத்தில் கம்பனி தொழிற்சாலை வளாகத்தினுள் கொண்டுவர செல்லக்கூடிய, கடனாளிக்கு உரிமை கீழே குறிப்பிடப்பட்ட இயந்திர உபகரணங்கள் மற்றும்/ அல்லது கடனாளி தற்பொழுது உள்ள அல்லது இதன் பின்னர் எல்லா சந்தர்ப்பத்திலும் மற்றும் காலத்திற்கு காலம் வியாபாரம் செய்யக்கூடிய வேறு வளாகத்தினுள் உள்ள மற்றும் வைத்துகொள்ளப்பட்ட அல்லது கீழே காண்பிக்கப்பட்ட இயந்திர உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ள மற்றும் அத்தோடு இதன் பின்னர் எவ்வேளையிலும் மற்றும் காலத்திற்கு காலம் மேலும் நடாத்திச் செல்லும் மேற்குறிப்பிடப்பட்ட வளாகத்தில் களஞ்சியத்தின் மீது கொண்டு சென்று பொருத்தப்பட்டுள்ள கீழே காண்பிக்கப்பட்ட இயந்திர உபகரணங்கள் அனைத்தும் மற்றும் அந்த வியாபாரத்தை அல்லது விற்பனை அல்லது இதன் பின்னர் குறிப்பிடப்பட்ட இயந்திர உபகரணங்கள் பொருத்தப்பட்டதன் மீது கடனாளி எச்சந்தர்ப்பத்திலும் வியாபார இடத்தை அல்லது இடத்தை நீக்கி அல்லது கொண்டு செல்லும் அனைத்து சகலதும்.

| பெறுமானம் | விபரம் | தொடர் இலக்கம் |
|---|---|---|
| 01 | ஸ்பிறே ட்ரயர் | CNK-SDD-0350 |

ஆர். ஏ. பி. ராஜபக்ஷ,
கம்பனிச் செயலாளர்.

2019, ஒற்றோபர் 22.

08-384